நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

நாள் - 13.07.2022. CC - 61/2020 அ.சா.3.வருணன்,
த/பெ.பரமசிவம்.

கு.ப.ம.எண்.2480/2022, நாள் - 15.06.2022 மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.3 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை -**

இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக போலிசார் 3 முறை விசாரித்தார்கள். போலிசார் அதனை எழுதிக்கொண்டார்கள். போலிசார் என்னை விபத்து நடந்த அன்றும், முதல் விசாரணையின்போதும், பின்னிட்டு வீட்டில் ஒருநாளும் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது, எதிரி ஓட்டி வந்த பேருந்து முன்னால் சென்ற லாரியை முந்தி சென்ற போது இந்த வழக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முன்னே சென்ற லாரியை, எதிரி ஓட்டி வந்த பேருந்து முந்தும்போது விபத்து ஏற்பட்டதாக கூறுவது உண்மை அல்ல என்றும், அவ்வாறு முந்தி செல்ல முயன்றபோது விபத்து நடந்திருந்தால் நான் விபத்தை பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எனது ஊர்க்காரர் என்பதால் நான் சம்பவத்தை பார்க்காமல் பார்த்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி வாகனத்தை போக்குவரத்து விதிமுறைகளின்படி முறையாக பேருந்தை இயக்கினார் என்றாலும், விபத்தில் இறந்த ஸ்டாலின்தான் வாகனத்தை தாறுமாறாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்திருந்தால் பிரேத விசாரணையில் முதன்முதலாக இறந்தவரை பார்த்தவராக சேர்த்திருப்பார்கள் என்றும், அவ்வாறு சேர்க்காததால் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(ஒம்/-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,)
நீதித்துறை நடுவர், திருவையாறு.